# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 31.05.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.488**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.489**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.490**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2023–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.491**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம், வார்டு A, புல எண்.100A, இல் திருநகர் பகுதியில் விளையாட்டு திடலுக்காக ஒதுக்கப்பட்ட பொது ஒதுக்கீடு இடத்தில் கோவில் கட்டுவதை தடுத்து நிறுத்தும் வகையில் நிரந்திர உறுத்துக்கட்டளை வழங்கக்கோரி திரு.எம்.இ.விஸ்வநாதன், சாந்தி மற்றும் ஆணையர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆகியோரை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு நகராட்சிக்கு எதிராக திருமதி.எஸ்.லதாமணி என்பவரால் வழக்கு தொடரப்பட்டு 19.04.2023 இல் விசாரணைக்கு வருவதாக பார்வையில் கண்டவாறு நீதிமன்ற அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர்வழக்காட ஆகும் உத்தேச செலவினம் ரூபாய்.5000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.671/2023/எப்1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.492**

6. இந்நகராட்சியின் 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.795/2023/அ2)
**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.493**

7. 15 வது நிதிக்குழு மானியம் (Tied, Untied Grant ) 20222–2023 இன் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை நாளிதழ்களில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை செலுத்த கோரி பட்டியல் தொகை பெறப்பட்டுள்ளது அதன் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | Tied Grand | Rs.4,284 | தினகரன் நாளிதழில் 04.04.2023 ல் வெளியிடப்பட்டது |
| 2 | Untied Grand | Rs.11,844 | தினபூமி நாளிதழில் 30.03.2023 ல் வெளியிடப்பட்டது. |
| | Total | 16,128 | |

மேற்காண் தொகை ரூ.4,284/-னை தினகரன் நாளிதழ்க்கும், ரூ.11,844/-னை தினபூமி நாளிதழ்க்கும் தொகை பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1240/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு:** 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்

2.மேற்காண் செலவின தொகை ரூ.16,128/-னை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.494**

8. இந்நகராட்சியில் சட்மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23 இன் கீழ் 28 பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு தினசெய்தி தாளில் 08.02.2023 ல் விளம்பரம் செய்தமைக்கான கட்டண தொகை ரூ.20,000 /- பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை தினசெய்தி நாளிதழ் அவர்களுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்முடுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகை ரூ.20,000 நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.495**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி நடப்பாண்டிற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட உத்தேச செலவினங்களுக்கு நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | விபரம் | உத்தேச செலவினம் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு உட்பட்ட 30 வார்டுகளில் உள்ள சொத்து வரி, காலியிட வரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்த பொதுமக்களுக்கு கேட்பு அறிவிப்புகள் முதல் அரையாண்டு மற்றும் இரண்டாம் அரையாண்டுக்கு கணினியில் இருந்து பிரிண்டிங் எடுக்கும் பணிக்கு உத்தேச செலவினம் | ரூ.90,000/- |
| 2 | இந்நகராட்சி 2022-2023 ஆம் ஆண்டிற்கான சொத்து வரி, காலியிட வரி, தொழில்வரி மற்றும் குடிநீர்கட்டணம் ஆகிய இனங்களுக்கு நிலுவை மற்றும் நடப்பாண்டுக்கான கேட்பு வசூல் நிலுவை (DCB) பதிவேடுகள் அலுவலக கணினியில் இருந்து பிரிண்டிங் மற்றும் தனித்தனி'யாக வார்டு வாரியாக பைண்டிங் செய்து கொள்ள ஆகும் உத்தேச செலவினம் | ரூ.20,000/- |
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2023 -2024 ஆண்டிற்கு பொதுமக்களுக்கு வரித்தொகை செலுத்துவது குறித்து ஒலி பெருக்கி மூலம் ஆட்டோ விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் | ரூ.1,00,000/- |
| 4 | 2023-2024 ஆம் ஆண்டிற்கான தீவிர வசூல் முன்னிட்டு சொத்தின் உரிமையாளர்களுக்கு வரி செலுத்திட BULK SMS விளம்பர | ரூ.70,000/- |

| | | |
|---|---|---|
| | அறிவிப்பு மூன்று மாதத்திற்கு ஒருமுறை மற்றும் வருடத்திற்கு 4 முறை SMS அனுப்ப ஆகும் உத்தேச செலவினம் | |
| 5 | 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிலுவையில் உள்ள வரி இனங்களை செலுத்த கோரி உரிமையாளர்களுக்கு இறுதி அறிவிப்பு சார்வு செய்ய Post Code மற்றும் நோட்டீஸ் அச்சு அடிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் | ரூ.40,000/- |
| 6 | 2023-2024 ஆம் ஆண்டிற்கு வரி செலுத்த விளம்பர பலகை மற்றும் உள்ளூர் கேபிள் டிவியில் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் | ரூ.15,000/- |
| 7 | வருவாய் உதவியாளர்கள் வார்டுகளில் வசூல் செய்ய கையேடு Hand Book மற்றும் நிலுவை பதிவேடு கணினியிலிருந்து பிரிண்டிங் செய்து பைண்டிங் செய்ய ஆகும் உத்தேச செலவினம் | ரூ.15,000/- |
| | மொத்தம் | ரூ.3,50,000/- |

மேற்கண்ட வரி இனங்களுக்கு நடப்பாண்டிற்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கு ஆகும் செலவுத்தொகைகளுக்கு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய நிறுவனங்களால் பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.921/2023/அ1)

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.496**

10. இந்நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்களில் கழிப்பிடங்கள் செயல்படும் நேரம், பராமரிப்பாளர் பெயர் மற்றும் அவரது விபரங்கள் போன்றவற்றை கழிப்பிடங்களின் சுவரில் பெயிண்ட் மூலம் எழுதிடவும் கழிப்பிடங்களுக்கு அருகில் பொதுமக்கள் அறியும் வண்ணம் "கழிப்பிடம் செல்லும் வழி" என்னும் விளம்பர பலகை வைத்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளும் உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் 25.04.2023 அன்று பெறப்பட்டுள்ளது அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | இடம் ஒன்றுக்கு தொகை |
|---|---|---|
| 1 | M/s.G.C.ரமேஷ் எலக்ட்ரிக்கல்ஸ், 150/5, P.P.M நகர், புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம் | ரூ.1125/- |
| 2 | The Explosive Enterprise, Gobichettipalayam | ரூ.1080/- |
| 3 | சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ், முத்து வேலப்ப கவுண்டர் வீதி, கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், (அருகில்) புதுப்பாளையம் | ரூ.1050/- |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3 இல் குறிப்பிட்டுள்ள சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ், முத்துவேலப்ப கவுண்டர் வீதி, புதுப்பாளையம், கோபிசெட்டிபாளையம், என்ற நிறுவனத்தின் விலை விகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக

உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.கஎண்.784/2023/எச்1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு **1. அனுமதிக்கப்பட்டது**

**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது**

**3. அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.497**

11. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 17 கடைகளுக்கு 03.05.2023ம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 25, 39, 35, 36, 50, 52, 38, 65, 21
2. புதிய பேருந்து நிலைய காலியிடத்தில் உள்ள இளநீர் கடை.
3. பழைய பேருந்து நிலைய கடை எண். 4
4. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைகளுக்கு கிழபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 4, 5
5. ராமநாதன் வீதி கடை எண். 2
6. வாய்க்கால் ரோடு பதிவிலாஸ் வீதி கடை எண். 1
7. IUDP மோர் மார்கட் கடை எண். 10, 11

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்ட விவரப்படி ஒரே ஒரு கடைக்கு மற்றும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **குத்தகை இனங்கள்** | **ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர்** | **ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ..** | **ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ.** | **ஏலக் கேள்வி** |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] |
| 1 | வாய்க்கால் ரோடு பதிவிலாஸ் வீதி கடை எண். 1 | திருமதி.ஏ.காந்திமதி க/பெ. அங்கப்பன், 27, நாகமலை எக்ஸ்டன்சன், கோபி 99762 07452 | ரூ.2,990/- | ரூ.3,400/- | இல்லை |
| | | திரு.எம்.மணிகண்டன் த/பெ. முருகன், 19, குப்பாண்டார் வீதி-5, கோபி - 638476 99431 19522 | ரூ.2,990/- | **ரூ.3,500/-** | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1, வாய்க்கால் ரோடு பதிவிலாஸ் வீதி கடை எண்.01 -க்கு திருமதி.ஏ.காந்திமதி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், எற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.2,990/- ஐ விட கூடுதலாக ரூ.510/-

சேர்த்து, திரு.எம்.மணிகண்டன் என்பவர் மாதவாடகை ரூ.3,500/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

எனவே வாய்க்கால் ரோடு, பதிவிலாஸ் வீதி கடை எண். 01 – க்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு திரு.எம்.மணிகண்டன் த/பெ. முருகன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3)

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.498**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் 2021–22 ஆம் ஆண்டு தணிக்கை மேற்கொண்டைமைக்கு தணிக்கை கட்டணம் ரூ.1,09,708/– செலுத்தப்பட வேண்டும் என 2021–22 ஆம் ஆண்டு வருவாய் நிதி தணிக்கை அறிக்கை பத்தி எண்.44 ல் தடை எழுப்பப்பட்டுள்ளது. எனவே, மேற்படி 2021–22 ஆம் ஆண்டு தணிக்கை கட்டணம் ரூ.1,09,708/– யை உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1389/2020/B3)

**அலுவலக குறிப்பு:**– மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.499**

13. நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2 022–2023 ன் படி புதியதாக கட்டப்பட்டு வரும் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட (KNMT SHOPS) 12 கடைகளுக்கு 10.05.2023 ம் தேதியன்று முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் நடைபெற்றது.

மேற்படி கடைகளில் கடை எண். 01 முதல் கடை எண்.03 வரையிலான கடைகளுக்கு தலா இரண்டு நபர்களும், கடை எண்.04 க்கு மூன்று நபர்களும் ஏலத்தில் கலந்து கொண்டனர். கடை எண். 05 க்கு இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியிலும், இரண்டு நபர்கள் ஏலத்திலும், கடை எண். 06 க்கு இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியிலும், ஐந்து நபர்கள் ஏலத்திலும் கலந்து கொண்டனர். கடை எண். 07 முதல் 12 வரையிலான 6 கடைகளுக்கு ஒருவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எ ண். | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி/ ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய KNMT கடை எண். 01 | ராஜா கேட்டர்ஸ்,<br>என்.அன்புச்செல்வம்,<br>12, சி.கே.எஸ்.நகர், கோபி<br>96888 91555 | **ரூ.13,000/–** | |
| | | ஆர்.கிருஷ்ணமூர்த்தி<br>த/பெ. ரங்கசாமி,<br>பழைய தண்ணீர் டேங்க் வீதி,<br>மாரியம்மன் கோயில் வீதி,<br>காராப்பாடி 638 457<br>96888 94555 | ரூ.12,500/– | |
| 2 | பேருந்து நிலைய KNMT கடை எண். 02 | ராஜா கேட்டர்ஸ்,<br>என்.அன்புச்செல்வம்,<br>12, சி.கே.எஸ்.நகர், கோபி<br>96888 91555 | **ரூ.20,500/–** | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆர்.கிருஷ்ணமூர்த்தி<br>த/பெ. ரங்கசாமி,<br>பழைய தண்ணீர் டேங்க் வீதி,<br>மாரியம்மன் கோயில் வீதி,<br>காராப்பாடி 638 457<br>96888 94555 | ரூ.15,500/- | |
| 3 | பேருந்து நிலைய KNMT கடை எண். 03 | ராஜா கேட்டர்ஸ்,<br>என்.அன்புச்செல்வம்,<br>12, சி.கே.எஸ்.நகர், கோபி<br>96888 91555 | **ரூ.13,500/-** | |
| | | ஆர்.கிருஷ்ணமூர்த்தி<br>த/பெ. ரங்கசாமி,<br>பழைய தண்ணீர் டேங்க் வீதி,<br>மாரியம்மன் கோயில் வீதி,<br>காராப்பாடி 638 457<br>96888 94555 | ரூ.13,000/- | |
| 4 | பேருந்து நிலைய KNMT கடை எண். 04 | ஜி.எம்.சதாசிவம்<br>த/பெ, முத்துசாமி,<br>26, மாதேஸ்வரன் கோயில்<br>வீதி – 4, கோபி<br>97886 03562 | ரூ.16,500/- | |
| | | ராஜா கேட்டர்ஸ்,<br>என்.அன்புச்செல்வம்,<br>12, சி.கே.எஸ்.நகர், கோபி<br>96888 91555 | **ரூ.17,000/-** | |
| | | ஆர்.கிருஷ்ணமூர்த்தி<br>த/பெ. ரங்கசாமி,<br>பழைய தண்ணீர் டேங்க் வீதி,<br>மாரியம்மன் கோயில் வீதி,<br>காராப்பாடி 638 457<br>96888 94555 | ஏலம் கோரவில்லை | |
| 5 | பேருந்து நிலைய KNMT கடை எண். 05 | ஏ.வி.பாலு<br>த/பெ.வேணுகோபால்<br>45, காளியண்ணன் எக்ஸ்டன்சன்,<br>வாய்க்கால் ரோடு, கோபி.<br>99949 10268 | **ரூ.19,000/-** | |
| | | பி.ஜெயந்தி<br>க/பெ,(லேட்) மோகன்.<br>13, பெரியார் நகர், நாகர்பாளையம்<br>ரோடு, கோபி<br>94436 84221 | ரூ.18,100/- | |
| | | ஐ.பரத் த/பெ. ஐயப்பன்,<br>20/5, கஸ்தூரிபாய் வீதி, கூகலூர்,<br>638313<br>63800 33474 | | ரூ.15,000/- |
| | | எம்.சகுந்தலா,<br>க/பெ. முனுசாமி,<br>50, சமத்துவபுரம், அயலூர், கோபி<br>638313<br>95005 48085 | | ரூ.13,200/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | பேருந்து நிலைய KNMT கடை எண். 06 | சு.சந்திரன்<br>த/பெ. சுப்பிரமணியம்,<br>2/4, மகாலட்சுமி நகர்,<br>மொடச்சூர். கோபி<br>82207 15953 | **ரூ.22,300/-** | |
| | | எம்.பி.முனுசாமி<br>த/பெ. பழனிசாமி,<br>1ஏ, செங்கோட்டையன் காலணி,<br>பெரிய மொடச்சூர்,<br>கோபி 638476<br>95005 48055 | ரூ.22,200/- | |
| | | கண்ணகி<br>க/பெ. (லேட்) முனியாண்டி,<br>20ஏ, மாதேஸ்வரன் கோயில்<br>வீதி-4, கோபி 638452<br>94882 22905 | ரூ.16,500/- | |
| | | ஜி.எஸ்.ஸ்ரீவிஷ்ணு<br>த/பெ. சுப்பிரமணியம்,<br>79, கருமாயா வீதி - 4,<br>கோபி 638452<br>74015 86262 | ஏலம் கோரவில்லை | |
| | | எஸ்.தௌஹிரா<br>க/பெ. சையத்சலாம்,<br>3, டூரிசுப்ரமணியம் வீதி,<br>கோபி 638452<br>99766 44022 | ரூ.16,600/- | |
| | | கண்ணகி<br>க/பெ. (லேட்) முனியாண்டி,<br>20ஏ, மாதேஸ்வரன் கோயில் வீதி-4, கோபி 638452<br>94882 22905 | | ரூ.12,000/- |
| | | பி.ஜெயந்தி<br>க/பெ,(லேட்) மோகன்.<br>13, பெரியார் நகர், நாகர்பாளையம் ரோடு, கோபி<br>94436 84221 | | ரூ.12,600/- |

மேற்கண்ட விபரங்களின்படி

1. பேருந்து நிலைய KNMT கடை எண்.01 க்கு ராஜா கேட்டர்ஸ், என், அன்புச்செல்வம் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.13,000/- ,
2. பேருந்து நிலைய KNMT கடை எண்.02 க்கு ராஜா கேட்டர்ஸ், என்,அன்புச்செல்வம் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.20,500/-
3. பேருந்து நிலைய KNMT கடை எண்.03 க்கு ராஜா கேட்டர்ஸ், என்,அன்புச்செல்வம் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.13,500/-
4. பேருந்து நிலைய KNMT கடை எண்.04 க்கு ராஜா கேட்டர்ஸ், என், அன்புச்செல்வம் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.17,000/-

5. பேருந்து நிலைய KNMT கடை எண்.05 க்கு ஏ.வி.பாலு த/பெ. வேணுகோபால் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.19,000/- மற்றும்
6. பேருந்து நிலைய KNMT கடை எண்.06 க்கு சு.சந்திரன் த/பெ. சுப்பிரமணியம் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.22,300/-

ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு மேற்படி கடைகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், மேலும் மேற்படி கடைகளுக்கு ஒரு வருட வாடகை வைப்புத் தொகை வசூல் செய்ய நகர்மன்றத்தலைவர் அவர்கள் 12.05.2023 ம் தேதியில் முன் அனுமதி வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கவும், ஏலம் போகாத கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 773/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. 8 வது நகர்மன்ற உறுப்பினர்கள் ஒருவர் மட்டும் கடை எண்.1 மற்றும் 3 ஆகிய கடைகளுக்கான வாடகைக்கு எதிர்ப்பை தெரிவித்தார்**
**2. அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.500**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள சொத்து உரிமையாளர்கள் சொத்து வரி செலுத்த பல்வேறு வகையான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 க்கு திருத்தங்கள் மேற்கொள்ளட்டு 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 84(1)ல் நகராட்சிகளின் சொத்து உரிமையாளர்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியினை ஏப்ரல் 30 ஆம் செலுத்தி 5% ஊக்கத்தொகை அதிகபட்சம் ரூ.5000/- வரை பெற தகுதியுடையவர் ஆகிறார்கள்.மேற்படி அறிவிப்பு பொதுமக்களுக்கு விரைந்து எளிதில் சென்றடைய BULK SMS மூலம் அறிவிப்பு வழங்க அரசு கூடுதல் செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் காணொலி ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. கோவையை சேர்ந்த VEMBHA IT என்ற நிறுவனம் குறைந்தபட்சம் 50000 SMS அனுப்ப கட்டணம் ரூ.16225/- நிர்ணயத்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. (ந.க.எண்.921/2023/அ1)

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ.16225/- VEMBHA IT நிறுவனத்திற்கு தொகை வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2. அங்கீகரிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.501**

15. தமிழ்நாடு அரசு கூடுதல் செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் காணொலி ஆய்வுகூட்டத்தில் ஏப்ரல் 30 ம் தேதிக்குள் சொத்து வரி செலுத்தும் உரிமைதாரர்கள் 5% ஊக்கத்தொகை அதாவது அதிகபட்சம் ரூ.5000/- வரை பெற தகுதி உடையவர்களாகிறார்கள். மேற்படி அறிவிப்பு பொதுமக்கள் எளிதில் அறியும் வகையில், ஆட்டோ விளம்பரம் பிளக்ஸ் போர்டு, பிட் நோட்டீஸ், BULK SMS முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து

| | | |
|---|---|---|
| Flex with Frame 4 | - | 6000/- |
| 4 x 3 Design | - | 500/- |
| நோட்டீஸ் பிரிண்ட் செய்தது (5000) | - | 6000/- |
| ஆட்டோ விளம்பர கட்டணம் (10 x 2500) | - | 25000/- |

37500/−

மேலும், தமிழ்நாடு அரசு இரண்டாண்டு சாதனை திட்டங்கள் பொதுமக்கள் அறியும் வண்ணம் முக்கிய இடங்களில் பிளக்ஸ் போர்ட் வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| Flex with Frame 3 (10 x 10) | – | 6000/− |
| Flex with Frame 1 (10 x 5) | – | 1290/− |
| Flex with Frame 1 (3 x 2) | – | 220/− |
| | | 7510/− |

ஆக மொத்தம் ரூ.45010/− என்னால் செலவு செய்யப்பட்டது என வருவாய் ஆய்வாளர் திரு.செந்தில்குமார் 15.05.2023 மனு அளித்துள்ளார். எனவே, மேற்படி தொகை ரூ.45010/− திரு.செந்தில்குமார் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகள் செய்தமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**

**2. அங்கீகரிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.502**

16. இந்நகராட்சி பகுதியில் நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்திட தெருக்களில் சுற்றித்திரியும், தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநாய் தடுப்பூசி (அறுவை சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு உணவு, மருந்துகள் , அறுவை சிகிச்சை அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பராமரிப்பு உட்பட) போடும் பணிக்கு 02.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் ரூ. |
|---|---|---|
| 1, | M/S.MASS TRUST,<br>56A,South Bazaar,<br>Palayamkottai,<br>Tirunelveli −627002. | ரூ.1400/−<br>(நாய் ஒன்றிற்கு) |
| 2. | M/S.HEAD TRUST,<br>Annai Indira Street,<br>M.G.R.Nagar,<br>Theni− 625531. | ரூ.1450/−<br>(நாய் ஒன்றிற்கு) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற, ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்துள்ள வரிசை எண் 1ல் கண்டுள்ள M/S.MASS TRUST, 56A South Bazaar, Palayamkottai, Tirunelveli −627002 அவர்களின் விலைவிகிதம் மற்ற ஒன்றை விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திடம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2177/2021/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய M/S.MASS TRUST, 56A,South Bazaar, Palayamkottai, Tirunelveli நிறுவனத்திற்கு பணி

உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

3. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**3. அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.503**

17. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு கலவை உரத்திட்டத்தின் கீழ் 1990-91 ஆம் ஆண்டின் புதிதாக வாங்கப்பட்ட லாரிக்கு ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு துலக்குநர் பணியிடங்களை தோற்றுவித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.51510/91/ஜே1 நாள்.07.10.1991 இல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியிடங்கள் 01.10.1991 முதல் ஆண்டு தோறும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்யப்பட்டு வருகிறது. இறுதியாக மேற்படி பணியிடங்கள் 01.10.2008 முதல் 30.09.2010 வரை நீடித்து வைத்துக்கொண்டைமைக்கு பின்னேற்பும் 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை மூ.மு எண்.8269/2010/ஜே3 நாள்.21.03.2011 இல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடம் இந்நகராட்சிக்கு அவசியமாக தேவைப்படுவதால் 01.10.2011 முதல் 30.09.2023 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2023 முதல் நிரந்திரமாக வைத்துக்கொள்ள அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2023 வரை நீட்டித்து வைத்து கொள்வதற்கு பின்னேற்பும் 01.10.2023 முதல் நிரந்திரமாக வைத்துக் கொள்வதற்கும் அனுமதி வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் இப்பணியிடங்களுக்காகும் செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்9004/2008/எச்1)

**அலுவலக குறிப்பு:** மேற்படி பணியிடங்களானது இந்நகராட்சிக்கு மிகவும் அவசியமாகிறது எனவே 01.10.2011 முதல் 30.09.2023 வரை நீடித்து வைத்துக் கொள்வதற்கும் பின்னேற்பும் 01.10.2023 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.504**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணியாற்றி வரும் கீழ்கண்ட விபரப்படி அனுமதிக்கப்பட்ட 21 தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்கள் நீட்டிப்பு செய்தமைக்கு பின்னேற்பும், மேற்படி பணியிடங்களை நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி கோரியும் கீழ்கண்டவாறு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட தூய்மைப்பணியிடங்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தூய்மைப் பணியிடங்களின் உத்தரவு விபரம் | பின்னேற்பு மற்றும் நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்ட கால அளவு விபரம் | பின்னேற்பு மற்றும் நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்பட்ட உத்தரவு விபரம் |
|---|---|---|---|---|
| 1. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 7 எண்ணிக்கை | 1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை | 01.04.1991 முதல் ஆண்டுதோறும் நீட்டித்துக்கொள்ள | நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்கள் செயல்முறை |

| | | | | |
|---|---|---|---|---|
| | (லாரி மஸ்தூர்) | உத்தரவு மூ.மு.எண்9618/1991/ ஜே1 நாள்.05.03.1991<br>2. அரசாணை (நிலை) 71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.05.05.1998 | அனுமதிக்கப்பட்டதாகும் 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டிப்பு அனுமதி | உத்தரவு மூ.மு.எண்.8269/10/ ஜே3 நாள்.21.03.2011 |
| 2. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 10 எண்ணிக்கை | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு.எண்.30836/2000/ஜே 3 நாள்.12.06.2000 | 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.20211 வரை நீட்டிப்பு அனுமதி | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு.எண்.8269/10/ ஜே3 நாள்.21.03.2011 |
| 3. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 2 எண்ணிக்கை (தினசரி அங்காடி) | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு.எண் 9619/1991/ஜே1 நாள்.05.03.1991 | 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.20211 வரை நீட்டிப்பு அனுமதி | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு.எண்.8269/10/ ஜே3 நாள்.21.03.2011 |
| 4. | தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் 2 எண்ணிக்கை (பேருந்து நிலையத்திற்கு) | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு.எண் 9617/1991/ஜே1 நாள்.05.03.1991 | 01.10.2008 முதல் 30.09.2010 வரை பின்னேற்பு மற்றும் 01.10.2010 முதல் 30.09.20211 வரை நீட்டிப்பு அனுமதி | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு.எண்.8269/10/ ஜே3 நாள்.21.03.2011 |

மேற்கண்ட 21 தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் அனுமதியளித்தும் 01.10.2008 முதல் 30.09.2010 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கும் 01.10.2010 முதல் 30.09.2011 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதியளித்தும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை உத்தரவு மூ.மு.எண்.8269/2010/ஜே3 நாள்.21.03.2011 இல் உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் 01.10.2011 முதல் 30.09.2023 வரை இப்பணியிடங்கள் நீட்டிப்பு செய்து கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2023 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி 21 தூய்மைப் பணியாளர் பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2023 வரை நீட்டித்து வைத்து கொள்வதற்கு பின்னேற்பும், 01.10.2023 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி வழங்க கோரியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1667/2017/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : மேற்படி பணியிடங்களுக்கு 01.10.2011 முதல் 30.09.2023 வரை நீட்டித்து கொள்வதற்கு பின்னேற்பும் 01.10.2023 முதல் இப்பணியிடங்களை நிரந்தரமாக வைத்துக்கொள்ள அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.505**

19. இந்நகராட்சி பகுதியில் தினமும் சேகரமாகும் நாப்கின்கள், பேடுகள், குழந்தைகளின் அணையாடைகள் மற்றும் வீடுகளில் உருவாகும் எரிக்கும் தன்மையுடைய அபாயகரமான கழிவுகள் போன்றவற்றை திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி எரித்து அப்புறப்படுத்திட "ஒளிரும் ஈரோடு

அமைப்பினரால்" "எரியூட்டும் இயந்திரம்" ராமர் எக்ஸ்டென்சன் மின்மயான வளாகத்தில் நிறுவப்பட்டு 19.05.2023 முதல் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் மேற்படி இயந்திரத்தினை தொடர்ந்து இயக்குவதற்கு TNPCB யில் இருந்து Consent to Operate (CTO) பெற வேண்டியுள்ளது. இந்த இசைவாணை பெறுவதற்கு ரூ.8800/– DEE,TNPCB பெருந்துறை அவர்களுக்கு வங்கிவரைவோலையாக செலுத்தப்பட வேண்டும். மேற்காணும் தொகையை செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1963/2020/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.506**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 37 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s S.S. Engineerrs, 3/6, Kamadenu Nagar,Vadavalli, Coimbatore – 641041 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி பணியின் ஒப்பந்த காலம் 02.06.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 24.05.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் 02.06.2023 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.570/– என்னும் விலைவிகிதத்திலேயே தொடர்ந்து 03.06.2023 முதல் 02.07.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து ஒப்பந்தகாலத்தினை கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 03.06.2023 முதல் 02.07.2023 ஆம் தேதி வரை ஒரு மாத காலத்திற்கு நிர்வாக நலன் கருதி காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.570/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 37 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.5.48/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. **(ந.எண். 0371/2023/எச்1)**

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.507**

21. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள கடைகள் மற்றும் காலியிட குத்தகை இனங்களுக்கு 31.03.2017 அன்று 9 ஆண்டுகள் குத்தகை உரிம காலம் முடிவடைந்த நிலையில்

அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை. நாள் 03.07.2007 ன் படி அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையில் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (மன்றத் தீர்மான எண். 22 நாள் 30.04.2018. 3060/2016/அ3) மேற்கண்டவாறு மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகையின் அடிப்படையில் 01.04.2017 முதல் 31.03.2020 வரை பட்டியலில் கண்டுள்ள கடை குத்தகைதாரர்களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு, மேற்படி உரிமம் 31.03.2020 ம் தேதியுடன் முடிவடைந்ததன்படி, 01.04.2020 முதல் 31.03.2023 வரை இரண்டாவது மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது 01.04.2023 முதல் 31.03.2026 முடிய மூன்றாவது மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பிக்கப்படவேண்டியுள்ளது.

| வ. எ ண் | உரிமம் எண் | உரிமதாரர் பெயர் | கடை விபரம் | 31.03.2023 அன்று உள்ள வாடகை ( சரக்கு மற்றும் சேவை வரி தனியாக) | 01.04.2023 முதல் 15% உயர்த்துப் பட்ட வாடகை ( சரக்கு மற்றும் சேவை வரி தனியாக) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) ரூ. | (6) ரூ. |
| 1 | 057/803 | அருள்முருகன்.எம்.எம் த/பெ. மணி | எம்யூடிஎப் – புதிய பேருந்து நிலைய கடை எண். 3 | **10120** | **11638** |
| 2 | 057/811 | பிரபு.எம்.எஸ் த/பெ. சங்கரப்பன் | எம்யூடிஎப் – புதிய பேருந்து நிலைய கடை எண். 11 | **9200** | **10580** |
| 3 | 057/824 | சண்முகவடிவு.என் த/பெ. நடராஜன் | எம்யூடிஎப் – பழைய பேருந்து நிலைய கடை எண். 8 | **9200** | **10580** |
| 4 | 057/839 | அப்துல்கரீம்.டி த/பெ. தஸ்தகீர் | எம்யூடிஎப் – பழைய பேருந்து நிலைய கடை எண். 23 | **7245** | **8332** |
| 5 | 057/848 | ஜோதி.கே த/பெ. காளியப்ப கவுண்டர் | எம்யூடிஎப் – பழைய பேருந்து நிலைய கடை எண். 32 | **3795** | **4364** |
| 6 | 057/880 | வேல்முருகன்.எஸ் த/பெ. சுப்ரமணியம் | எம்யூடிஎப் – பழைய பேருந்து நிலைய கடை எண். 64 | **3795** | **4364** |

மேற்கண்ட விபரப்படி பட்டியலில் கண்டுள்ள 6 கடை குத்தகைதாரர்கள் 01.04.2023 முதல் தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு 31.03.2026 வரை உரிமம் நீட்டிப்பு செய்ய சம்மதம் தெரிவித்து, உரிமம் புதுப்பித்தல் கட்டணம், வித்தியாச வாடகை வைப்பு தொகை மற்றும் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் புகைப்படத்துடன் கூடிய ஒப்பந்தப்பத்திரம் ஆகியவற்றுடன் உரிமம் நீட்டிப்பு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் வருவாய் ஆய்வர் அவர்கள் உரிமம் நீட்டிப்பு செய்ய விண்ணப்பம் சமர்பித்துள்ள 6 கடை குத்தகைதாரர்களுக்கு 01.04.2023 முதல் 31.03.2026 வரை மூன்றாண்டுகளுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்யலாம் என, தனது 22.05.2023 ந் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே பட்டியலில் கண்டுள்ள 6 கடைகளுக்கு கலம் (5) ல் உள்ள தற்போதைய வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து கலம் (6) ல் கண்டுள்ள படி மாதவாடகை நிர்ணயம் செய்து, 01.04.2023 முதல் 31.03.2026 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2575/2017/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்,
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.508**

22. இந்நகராட்சி பகுதியில் உள்ள 30 வார்டுகளிலும் தினமும் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகள் அனைத்தும் கரட்டூர் வளமீட்பு மையத்தில் (RRC) சேகரிக்கப்பட்டு அவ்வப்போது சிமெண்ட் ஆலைகளுக்கு NGO மூலம் லாரிகளில் அனுப்பப்பட்டு மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் NGO மூலம் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்படும் பணி கடந்த 30.04.2023 ஆம் தேதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. இதனால் வளமீட்பு மையம் முழுவதும் பிளாஸ்டிக் கழிவுகள் நிறைந்து இனிவரும் நாட்களில் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து வைக்க இயலாத அளவில் வளமீட்பு மையம் நிறைந்து உள்ளது. எனவே NGO மூலம் மீண்டும் வாகனங்கள் இப்பணிக்கு அனுப்பும் வரை நகராட்சி மூலம் லாரிகளை வாடகைக்கு எடுத்து பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.3.75 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1152/2023/எச்1)

**அலுவகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மானம் எண்.509**

23. நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில், தூய்மை பாரத திட்டம் (URBAN 2.0) 2022–2023 ன் படி, புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறைக்கான (SMART TOILET) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் 24.05.2023 ம் தேதியன்று நடைபெற்றது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள ஆண்டு குத்தகை தொகை. |
|---|---|---|
| 1 | திருமதி.எம்.பார்வதி<br>11ஏ/1, சிவசுப்ரமணியம் லேவுட்,<br>டி.வி.பட்டணம்,<br>உடுமலைப்பேட்டை | **ரூ.3,51,500/–** |
| 2 | திரு.வி.மாரியப்பன்<br>11ஏ/1, சிவசுப்ரமணியம் லேவுட்,<br>டி.வி.பட்டணம்,<br>உடுமலைப்பேட்டை | ரூ.3,02,000/– |

மேற்கண்ட விபரங்களின் படி புதிய ஆண்டுக்குத்தகை இனமான பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறைக்கு திரு.வி.மாரியப்பன் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,02,000/– விட கூடுதலாக ரூ.49,500/– சேர்த்து, திருமதி.எம்.பார்வதி என்பவர் ரூ.3,51,500/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 25.05.2023 ம் தேதிய குறிப்பில், மேற்படி புதிய ஆண்டு குத்தகை இனத்திற்கு திருமதி.எம்.பார்வதி என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ3,51,500/- ஐ ஏற்றுக்கொண்டு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் குறிப்பின்படி, புதிய ஆண்டு குத்தகை இனமான பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறைக்கு (SMART TOILET) திருமதி.எம்.பார்வதி என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ3,51,500/- ஐ ஏற்றுக்கொண்டு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 772/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.
**மறு ஏலம் விட தீர்மானிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.510**

24. நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023 ன் படி புதியதாக கட்டப்பட்டு வரும் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட (KNMT SHOPS) கடை எண்.07 முதல் 12 வரையிலான 6 கடைகளுக்கு 24.05.2023 ம் தேதியன்று இரண்டாவது முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் நடைபெற்றது.

மேற்படி 6 கடைகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. கடை எண். 07, 09 மற்றும் 12 ஆகிய மூன்று கடைகளுக்கு மட்டும் தலா இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி/ ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத் தொகை |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய KNMT கடை எண். 07 | கண்ணகி<br>க/பெ. முனியாண்டி,<br>29ஏ, மாதேஸ்வரன் கோயில் விதி -4,<br>கோபிசெட்டிபாளையம்<br>94882 22905 | **ரூ.10,100/-** |
| | | எம்.சகுந்தலா<br>க/பெ. முனுசாமி<br>50, சமத்துவபுரம்,<br>கோபிசெட்டிபாளையம்.<br>95005 48085 | ரூ.10,000/- |
| 2 | பேருந்து நிலைய KNMT கடை எண். 09 | எம்.பி.முனுசாமி<br>த/பெ. பழனிசாமி,<br>1ஏ, செங்கோட்டையன் காலனி,<br>பெரிய மொடச்சூர்,<br>கோபிசெட்டிபாளையம்<br>95005 48085 | **ரூ.10,100/-** |
| | | கண்ணகி<br>க/பெ. முனியாண்டி,<br>29ஏ, மாதேஸ்வரன் கோயில் விதி -4,<br>கோபிசெட்டிபாளையம்<br>94882 22905 | ரூ.10,000/- |
| 3 | பேருந்து நிலைய KNMT கடை எண். 12 | ஜி.எம்.சதாசிவம்<br>த/பெ. முத்துசாமி | **ரூ.10,300/-** |

| | | | |
|---|---|---|---|
| | | 26, மாதேஸ்வரன் கோயில் வீதி – 4<br>கோபிசெட்டிபாளையம்<br>97886 03562 | |
| | | கே.பி.செந்தில்குமார்<br>த/பெ. கே.எஸ்.பழனியப்பன்,<br>56/1, சென்னியப்பா நகர்,<br>நாகர்பாளையம், கலிங்கியம்<br>கோபி தாலுக்கா<br>98425 75656 | ரூ.10,200/– |

மேற்கண்ட விபரங்களின்படி

1. **பேருந்து நிலைய KNMT கடை எண்.07** க்கு திருமதி.கண்ணகி க/பெ.முனியாண்டி என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10,100/– ,
2. **பேருந்து நிலைய KNMT கடை எண்.09** க்கு திரு.எம்.பி.முனுசாமி த/பெ. பழனிசாமி என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10,100/– மற்றும்
3. **பேருந்து நிலைய KNMT கடை எண்.12** க்கு திரு.ஜி.எம்.சதாசிவம் த/பெ. முத்துசாமி என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.10,300/–

ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு மேற்படி 3 கடைகளுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 773/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மானம் எண்.511**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்(பொ)
கோபிசெட்டிபாளையம் நகராட்சி